1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினு 235 ஒத்தி வைக்கப்படுகிறது. வினுக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்ட மன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 1978 ஆம் ஆண்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்றல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/78) பிரதியை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது,

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 25ஆம் தேதி வந்திருக்கிறது. கொஞ்சம் அவகாசம் கேட்டிருக்கிறுர்கள். பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. கோ. சி. மணி : துணைத் தலைவர் அவர்களே, விதி 43ன் பிரகாரம் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இன்றைய தினம் வருமென்று சொன்னுர்கள். அது ஒரு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அது அவையின் முன்னவருக்குத் தரப்பட்டிருக்கிறது. விரைவில் எடுத்துக் கொள்ளப்படும். இன்றைக்கில்லை. தகவல் சேர்ந்த பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

3. அரசின் தீர்மானம்.

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே,

" தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது " என்று முன்மொழிகிறேன்.